## இலங்கை மன்றம் - 2017

-----------------------------------------------------------------

இலங்கை மன்றத்தின் 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றக்கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களது பொழிப்பினை உள்ளடக்கிய 2017 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1973 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க இலங்கை மன்ற அதிகாரச் சட்டத்தின் 13(3) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் மன்றத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச் சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் விரிவானதோர் அறிக்கை மன்றத்தின் தலைவருக்கு 2018 மே 15 ஆந்திகதியன்று வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக் கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

-----------------------------------------------------------------

இந் நிதிக் கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

-----------------------------------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.
நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் மன்றத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி மன்றத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல முகாமைத்துவத்தினால் பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் சுட்டிக் காட்டப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்படட விடயங்களால் எழும் தாக்கங்களைத் தவிர, நிதிக்கூற்றுக்களில் 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான இலங்கை மன்றத்தின் நிதி நிலைமை மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிச் செயற்பாடுகள் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கேற்ப உண்மையானதும் நியாயபூர்வமானதுமான நிலைமையைத் தோற்றுவிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமம் 03**

நியமத்தின் 37 ஆம் பந்தியின் பிரகாரம், சேவை வழங்குகையில் அல்லது ஏனைய நடவடிக்கையின்போது ஏற்படக்கூடிய நிச்சயமற்ற நிலையை எதிர்கொள்வதற்கான நிதியேற்பாட்டை மேற்கொள்ளும்போது கிட்டிய அல்லது நம்பத்தகு தகவல்களின் அடிப்படையில் தீர்மானங்களை மேற்கொள்ளவேண்டுமாயினும், பெற வேண்டிய மீதிகளின் பொருட்டு ஐயக் கடனுக்கான நிதியேற்பாட்டை மேற்கொள்கையில் அவ்வாறு தீர்மானிக்காது பெற வேண்டிய மொத்த மீதிக்கும் பொதுவானதொரு சதவீதத்தைப் பயன்படுத்தி ஐயக் கடனுக்கான நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**(ஆ) இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமம் 07**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நியமத்தினது 40 ஆம் பந்தியின் பிரகாரம், நிலையான சொத்தைக் கணக்கிலிடுகையில் கிரய மாதிரியையோ அல்லது மீளப் பெறுமதியிடல் மாதிரியையோ அதற்கான கணக்கீட்டுக் கொள்கையாகத் தெரிவு செய்ய வேண்டுமாயினும், மீளாய்வாண்டினது இறுதித் தினத்தில் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் மோட்டார் வாகனங்களது பெறுமதியைக் குறிப்பிடும்போது கிரய மாதிரி மீளப் பெறுமதியிடல் மாதிரி ஆகிய இரண்டுமே பயன்படுத்தப்பட்டிருந்தன.

(ii) நியமத்தினது 49 ஆம் பந்தியின் பிரகாரம், சொத்தை மீளப்பெறுமதியிடுகையில் அவ்வகைச் சொத்துக்கள் யாவுமே மீளப் பெறுமதியிடப்பட வேண்டுமாயினும், ரூபா. 40,327,280 கிரயமுடைய 12 மோட்டார் வாகனங்களில் 06 மோட்டார் வாகனங்கள் மாத்திரம் ரூபா 21,300,000 பெறுமதியில் மீளப்பெறுமதியிடப்பட்டிருந்தன.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின்போது மீளப்பெறுமதியிடப்பட்ட 02 வாகனங்களது பெறுமதி கணக்கிலிடப்படாமையால் அவ்வாகனங்களது பெறுமதியும் மீளப்பெறுமதியிடல் ஒதுக்கமும் ரூபா 4,767,166 குறைவாகக் காட்டப்பட்டிருந்தன.

(ஆ) மீளாய்வாண்டின்போது மீளப் பெறுமதியிடப்படாத 04 வாகனங்கள் மீளப் பெறுமதியிடலுக்கான கற்பனைப் பெறுமதியின் அடிப்படையில் கணக்கிடப்படாமையல் வாகனப் பெறுமதியும் மீளப் பெறுமதியிடல் ஒதுக்கமும் ரூபா 11,800,000 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தன.

(இ) மீளாய்வாண்டினது ஆரம்பத் தினத்தில் உள்ளவாறான ரூபா 174,257,291 கிரயமுடையதும் ஆண்டின்போது ரூபா 2,630,841 செலவில் புனரமைக்கப்பட்டதுமான கட்டிடங்களை மீளப் பெறுமதியிட்டுக் கணக்கிலிடுவதற்குப் பதிலாக காப்புறுதி செய்யும் நோக்கில் 2017 ஆம் ஆண்டில் தனி நபர் ஒருவரால் ரூபா 650,000,000 மதிப்பீடு செய்யப்பட்ட மதிப்பீட்டுப் பெறுமதியை மீளப் பெறுமதியில் பெறுமதியாகக் கருத்திற் கொள்ளப்பட்டு நிதிக்கூற்றுக்களில் அது காட்டப்பட்டிருந்தது.

(ஈ) முன்னைய ஆண்டில் புதினப் பத்திரிகை விளம்பரங்களுக்கென செலவிடப்பட்ட ரூபா 56,625 அவ்வாண்டிற்கான செலவினமாகக் கணக்கிலிடப்படாது நடைபெறும் வேலையாகக் கணக்கிலிடப்பட்டிருந்தது.

### 2.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2012 ஆம் 2013 ஆம் ஆண்டுகளின்போது சேவை முடிவுற்ற 06 உத்தியோகத்தர்களிடமிருந்து மன்றத்தால் அறவிடப்பட வேண்டிய மீதியில் நிதிக்கூற்றுக்களின் பிரகாரமும் கடனுக்கான கோவையின் பிரகாரமும் ரூபா 79,065 வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

(ஆ) நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் கெமீ கெதர செயற்திட்டத்தின் நடைபெறும் வேலைகள் ரூபா 173,900 ஆகும். பேரேட்டின் பிரகாரம் இப் பெறுமதி ரூபா 128,900 ஆகியமையால் ரூபா 45,000 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 2.2.4 தொங்கற் கணக்கு

2005 ஆம் ஆண்டு தொடக்கம் நிலவி வரும் ரூபா 289,196 மற்றும் 2015 ஆம் ஆண்டு தொடக்கம் நிலவி வரும் ரூபா 189,588 பெறுமதியுடைய 02 தொங்கற் கணக்கு மீதிகள் என்பன மீளாய்வாண்டின் இறுதியிலும் தீர்த்து வைக்கப்படாதிருந்தன.

### 2.2.5 கணக்காய்விற்கான சான்றின்மை

வளப் பங்களிப்பாளர்களாக நியமனக் கடிதம் வழங்கப்பட்டிராத 10 உத்தியோகத்தர்கள் மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சின் கள உத்தியோகத்தர்களுக்கான 02 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் வளப் பங்களிப்பாளர்களாகப் பங்குபற்றி அவர்களுக்கு ரூபா 569,900 படியாக வழங்கப்பட்டிருந்தது.

### 2.2.6 பெற வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்தக் கடன்பட்டோர் மீதி ரூபா 15,356,258 ஆகும். இதில் நானாவித, கல்வி மற்றும் வியாபார அபிவிருத்திக் கூறின் கடன்பட்டோரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய 01 முதல் 05 ஆண்டுகள் வரையிலான கடன் மீதி ரூபா 4,511,762 ஆகும்.

(ஆ) உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திடமிருந்து 2006 - 2009 காலப் பகுதியின் பொருட்டு அறவிடப்பட வேண்டிய நிறுத்தி வைத்த வரியாகிய ரூபா 1,375,812 பெற வேண்டிய கணக்குகளில் காட்டப்பட்டிருந்தபோதும், மீளாய்வாண்டு இறுதியிலேனும் அதனைத் தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|---|
| (அ) | 2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 3.1.6 ஆம் பிரிவு | மீளாய்வாண்டிற்கான பொருட்களிப்பு அறிக்கை பூர்த்தி செய்யப்பட்டுக் கணக்காய்வுத் தினமான 2018 யூலை 08 ஆந் திகதியளவிலும் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2006 டிசெம்பர் 22 ஆந் திகதிய 2004/பிரச/1 (2016 திருத்தம்) தேசிய நூலக ஆவணமாக்கல் சேவைகள் சபை சுற்றறிக்கையின் 3.1 மற்றும் 3.2 ஆம் பிரிவுகள் | நூலகத்திற்குப் பொறுப்பாகவிருந்த பெண் உத்தியோகத்தர் 2017 டிசெம்பரில் இடமாற்றத்திற்குள்ளாகிய போதும் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கமைய இடமாற்றம் பெறுவதற்கு 03 மாதங்களுக்கு முன்னர் அல்லது ஆண்டின் இறுதியில் உள்ளவாறான நூலகப் புத்தகங்கள தொடர்பாக வருடாந்த பொருட்கணிப்பு மேற்கொண்டிருக்கவில்லை. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், மன்றத்தின் மீளாய்வாண்டிற்கான நிதிப் பெறுபேறு ரூபா 1,906,195 மிகை ஆகும். இதற்கெதிரான முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 7,139,359 ஆகும். முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டினது நிதிப் பெறுபேற்றில் ரூபா 9,045,554 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டினது ஏனைய வருமானத்தில் ரூபா 3,731,707 அதிகரிப்பு மற்றும் வழங்கல் மற்றும் நுகர்வு, பராமரிப்பு, ஏனைய செயற்பாட்டுச் செலவினம் என்பவற்றில் ரூபா 7,229,770 குறைவு என்பனவே அதிகரிப்புக்கான பிரதான காரணிகளாகும்.

மீளாய்வாண்டினதும் முன்னைய 04 ஆண்டுகளினதும் நிதிப்பெறுபேறுதளைப் பகுப்பாய்வு செய்கையில், 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் மிகை நிலவியபோதும், 2015 ஆம் ஆண்டில் அது ரூபா 16,935,858 பற்றாக்குறை ஆகியிருந்ததுடன், 2016 ஆம் ஆண்டில் அப் பற்றாக்குறை ரூபா 7,139,359 வரை குறைந்து 2017 ஆம் ஆண்டில் ரூபா 1,906,195 மிகையாக அதிகரித்திருந்தது. எவ்வாறாயினும், நிதிப் பெறுபேற்றில் ஊழியர்களது ஊதியம் மற்றும் நடைமுறை அல்லாத சொத்துக்களுக்கான தேய்மானம் என்பவற்றை மீண்டும் சீராக்கல் செய்ததன் பின்னர் 2013 ஆம் ஆண்டில் ரூபா 107,804,833 ஆகவிருந்த பங்களிப்பு வருடாந்தம் மாற்றங்களையடைந்தவாறு 2017 ஆம் ஆண்டில் ரூபா 128,168,715 ஆகியிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 திட்டமிடல்

மீளாய்வாண்டிற்கான வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டுக் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தபோதும், அத் திட்டமானது 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தியின் பிரகாரம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 4.1.2 நடவடிக்கைகளும் மீளாய்வும்

(அ) 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2017 ஆம் ஆண்டின்போது திட்டமிடப்பட்டு நடாத்தப்பட்ட செயலமர்வுகள், சான்றிதழ் வழங்கப்படும் கற்கை நெறிகள், டிப்ளோமா கற்கை நெறிகள் என்பன 37 சதவீதத்தால் குறைவடைந்திருந்தன.

(ஆ) மீளாய்வாண்டின்போது 90 செயலமர்வுகள், சான்றிதழ் வழங்கும் கற்கைநெறிகள், டிப்ளோமா கற்கை நெறிகள் என்பவற்றை நடாத்துவதற்கு 12 நிரந்தரப் பதவியணியைச் சேர்ந்த விரிவுரையாளர்களும் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்ட ஒரு விரிவுரையாளருமாக 13 விரிவுரையாளர்களது விரிவுரை மணித்தியாலங்கள் 2773 ஆகவிருந்தது. இதன் காரணமாக, ஒரு விரிவுரையாளரது வருடாந்த சராசரி விரிவுரை மணித்தியாலங்கள் 213 ஆகியது. எவ்வாறாயினும், இக்கற்கை நெறிகளை நடாத்துவதற்கு ஆண்டின்போது கழிந்த மொத்த விரிவுரை மணித்தியாலங்கள் 10,440 ஆகும். இதில் 7767 மணித்தியாலங்கள் வெளி விரிவுரையாளர்கள் மூலம் பெறப்பட்டதன் காரணமாக மன்றத்தின் விரிவுரையாளர்களதும் வெளி விரிவுரையாளர்களதும் விரிவுரைப் பங்களிப்பு 1.3 எனும் விகிதத்தில் அமைந்திருந்தது. அதற்கமைய, மன்றத்தின் விரிவுரையாளர்கள் முழுமையாக விரிவுரை மணித்தியாலங்களிற்கு சமூகமளித்ததாக கணக்காய்வில் திருப்தியடைய முடியாதுள்ளது.

## 4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்

(அ) 2016 ஆம் ஆண்டில் அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றினால் தொலைக்காட்சி நிகழ்ச்சித்திட்டம் ஒன்றைத் தயாரிப்பதற்கு வழங்கப்பட்ட நிதியில் எஞ்சிய ரூபா 704,676 மீளாய்வாண்டு இறுதியிலும் தீர்த்து வைக்கப்படுவதற்கான நடவடிக்கையின்றி பிற்போட்ட வருமானமாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) 2013 முதல் 2015 ஆம் ஆண்டு வரை பணி ஒப்படைப்பு அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவருக்கும் நாளாந்தச் சம்பளத்தைப் பெறும் உத்தியோகத்தர் ஒருவருக்கும் ஊழியர் சேமலாப நிதியப் பங்களிப்பு கொடுப்பனவு செய்யப்படாமையால் மீளாய்வாண்டின்போது பங்களிப்புத் தொகை நிலுவையாகவும் தண்டப்பணமாகவும் ரூபா 214,530 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## 4.3 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

புதிய கட்டிடத்தின் நடைபாதையை விரிவுபடுத்துவதற்காக (Extension for terrace) 2016 செப்டம்பர் 19 ஆந் திகதியன்று ரூபா 4,493,740 தொகைக்கான ஒப்பந்தம் வழங்கப்படடிருந்தது. இதற்கான திட்டத்தில் நிலவிய சிக்கல்கள் காரணமாக நிர்மாண வேலை இடை நடுவே நிறுத்தப்பட்டதால் ஒப்பந்தத்திற்கென வழங்கப்பட்ட ரூபா 898,748 முற்பணம் மற்றும் நிர்மாணிக்கப்பட்ட பகுதியை கழற்றி அகற்றுவதற்கு வழங்கப்பட்ட ரூபா 145,176 என மொத்தமாக ரூபா 1,043,924 செலவினமானது பயனற்ற செலவினமாக கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

## 4.4 பதவியணி நிர்வாகம்

2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரது எண்ணிக்கை 154 ஆகும். உள்ளவாறான பதவியணியினரின் எண்ணிக்கை 129 ஆகும். பதவியணியில் நிலவிய 27 வெற்றிடங்களுடன் 2 இரண்டாம் நிலை உத்தியோகத்தர்கள் மேலதிகமாக இருப்பதும் அவதானிக்கப்பட்டது. இவ்வெற்றிடங்களை நிரப்புவதற்கு மீளாய்வாண்டின் இறுதியிலேனும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிராததுடன் 2015 ஏப்ரல் தொடக்கம் வெற்றிடமாக இருந்த நூலகருக்கான பதவிக்குத் தகைமை வாய்ந்த உத்தியோகத்தர் ஒருவரை ஆட்சேர்ப்பதும் 2018 யூலை 20 வரை நடைபெறாதிருந்தது.

## 5. நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி

நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி தொடர்பாக ஐக்கிய நாடுகளின் 2030 நிகழ்ச்சி நிரலுக்கமைய சகல அரச நிறுவனங்களும் நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டியிருந்ததுடன் மீளாய்வாண்டில் இலங்கை மன்றம் அவர்களது நோக்கெல்லையின் கீழ் குறிப்பிடத்தக்களவு பணிகள் சம்பந்தமாக அறிந்திருந்தது.

இது சம்பந்தமாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி நோக்கத்தை அமுலாக்குவதன் பொருட்டு இலங்கை மன்றத்தில் வெளியிடப்பட்ட உள்ளகச் சுற்றறிக்கை / வழிகாட்டி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஆ) நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரலின் பிரகாரமான 17 நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி நோக்கங்களைச் சரிவர உணராது இலங்கை மன்றம் 03 நோக்கங்களைக் குறிப்பிட்டிருந்தபோதும், அவற்றுள் 02 நோக்கங்கள் மாத்திரமே நிலைத்து நிற்கவல்ல நோக்கங்களாக அவதானிக்கப்பட்டன.

(இ) நிலைத்து நிற்கவல்ல நோக்கங்களை நிறைவேற்றுவது சம்பந்தமாக இனங்காணப்பட்டிருந்த ஆண், பெண் சமத்துவத்திற்கு அனுசரணையான வரவு, செலவு சம்பந்தமாகவும் ஊனமுற்றோரை சக்திமிக்கவர்களாக்கும் நோக்கம் ஆகிய இரண்டையும் அமுலாக்குவதற்கு முயற்சிகளை மேற்கொள்ளும் நபர்களை இனங்காண்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமையால் நிறுவனத்திற்குரிய இலக்கைத் தயாரிக்கையில் பங்களிப்பு எதுவும் நிரூபணமாகாதிருப்பது அவதானிக்கப்பட்டது.

(ஈ) நிலைத்து நிற்கவல்ல இலக்கை எய்துவதற்கு மன்றம் இனங்கண்டுகொண்ட பணிகள் வருடாந்தத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டிராததுடன் அப்பணிகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான நிதியேற்பாடும் வருடாந்த வரவு, செலவுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 பொருட் கொள்வனவும் ஒப்பந்த நடவடிக்கைகளும்

#### பொருட் கொள்வனவு முகாமைத்துவம்

2006 பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 4.2.1(அ) வழிகாட்டலின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான பொருட் கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்படவில்லை.

## 7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுக் குறைபாடுகள் அவ்வப்போது தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத்துறை | அவதானிப்புகள் |
|---|---|---|
| (அ) | கடன்பட்டோர் கட்டுப்பாடு | மண்டப வசதிகளை வழங்குவது தொடர்பாக நிபந்தனைப் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளாமையால் கடனை அறவிடுவதில் தாமதம் |
| (ஆ) | கணனி முறைமை | குறித்தவொரு தினத்திலான கற்கை நெறிக் கட்டண நிலுவையை இனங்கண்டு கொள்ளும் விதத்தில் கணனி முறைமை பேணப்படவில்லை |
| (இ) | கற்கை நெறிகள் தொடர்பான அறிக்கைகளைத் தயாரித்தல் | மீளாய்வாண்டில் நடாத்தப்பட்ட சில கற்கை நெறிகளின் பொருட்டு உள்ளவாறான கிரய அறிக்கைகளைத் தயாரிக்காமை மற்றும் செயலமர்வுக்கான மதிப்பீட்டின்போது சகல உறுப்புகளையும் கவனத்திற்கொள்ளாமை. |
| (ஈ) | முற்பணத்தைத் தீர்த்து வைத்தல் | 2001 முதல் மீளாய்வாண்டு இறுதி வரை வழங்கப்பட்ட முற்பணத்தைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை. |
| (உ) | நூலகப் புத்தகப் பராமரிப்பு | தகைமையற்ற உத்தியோகத்தர்கள் நூலகத்திற்குப் பொறுப்பாக இருப்பதால் எடுத்துச் செல்லும் மற்றும் ஆய்வுப் புத்தகங்கள் முறைப்படி ஒழுங்குபடுத்தப்படாமை, புத்தகங்களை வழங்குதலும் மீண்டும் பெறுதலும், தண்டப்பண அறவீடு, புத்தகப் பதிவேட்டில் சகல புத்தகங்களை உள்ளடக்கும் நடவடிக்கைகள் என்பவற்றில் குறைபாடுகள் நிலவின. |